செ.கு.எண் : 005 நாள் : 22.01.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் ஆய்வுப் பணிகள் மேற்கொண்ட பிறகு மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று காலையிலிருந்து சென்னையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற பல்வேறு பணிகளை நேரடியாக பார்த்து கள ஆய்வினை மேற்கொண்டார்கள். அந்த வகையில், கிங் இன்ஸ்டிட்யூட் வளாகத்தில் சுமார் 4.9 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டப்பட்டு வரும் பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை (Multi Speciality Hospital) பணிகளை நேரடியாக ஆய்வு செய்தார்கள்.

இச்சிறப்பு மருத்துவமனையில் 18 துறைகளுடன் ஆறு லட்சம் சதுர அடி பரப்பில் 230 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டு வரும் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே ஆய்வு செய்தார்கள். இந்த ஆட்சி 2021 மே திங்கள் ஏழாம் தேதி அமைந்தவுடன், சரியாக அதற்கு அடுத்த மாதமே, ஜூன் திங்கள் 3ஆம் தேதி 2021ஆம் ஆண்டு சென்னை, கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டியூட் வளாகத்தில் 230 கோடி ரூபாய் செலவில் ஒரு புதிய பன்னோக்கு மருத்துவமனை ஒன்று கட்டப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும், மாண்புமிகு

முதலமைச்சர் அவர்கள் 2022 ஏப்ரல் திங்கள் 1ஆம் தேதி நேரடியாக வருகை தந்து மருத்துவமனை பணிகளை தொடங்கியும் வைத்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மருத்துவமனை பணிகளை தொடங்கி வைத்த பிறகு இன்றைக்கு இரண்டாவது முறையாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பணிகளை ஆய்வு செய்தார்கள். ஆய்வு செய்து பணிகள் விரைந்து முடிக்க வேண்டிய அவசியத்தையும், மாற்றுத்திறனாளிகளுக்கு சாய்வு தள பாதைகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், தூய்மை பணியாளர்கள் தங்குவதற்கு ஏற்ற வசதியையும், பசுமை கட்டிடமாக அது அமைய வேண்டியதன் அவசியத்தையும், அலுவலகரிடத்தில் வலியுறுத்தி சொல்லி விட்டு வந்திருக்கிறார்கள்.

அந்த வகையில், மருத்துவமனை கட்டிட பணிகள் மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக ஆய்வுகளை மேற்கொண்டு வருவதால் பணிகள் விரைந்து முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட இருக்கிறது.

சென்னை மாநகரில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மழைநீர் வடிகால்வாய்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற நாளிலிருந்து, சென்னையின் மழை வெள்ளநீர் பாதிப்புகளிலிருந்து இந்த மாநகரை மீட்பதற்கு அவர் எடுத்துக் கொண்டு வருகிற நடவடிக்கைகள் அனைவருமே அறிந்த ஒன்று.

அந்த வகையில், சென்னை மாநகராட்சியில் 209 கிலோமீட்டர் நீளத்திற்கு 699 கோடி ரூபாய் மதிப்பிலான மழை நீர் வடிகால்வாய்கள் கட்டுவதற்கு பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. அதில் 161 கிலோமீட்டர் நீளத்திற்கான மழை நீர் வடிகால்வாய்கள் வடகிழக்கு பருவமழைக்கு முன்பாகவே கட்டி முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வந்தது. அதனால் சென்னையில் வடகிழக்கு பருவமழை காலத்தில் மழைநீர் பாதிப்பு என்பது எங்கேயும் இல்லாத நிலை ஏற்பட்டு மாநகர மக்களால் வெகுவாக பாராட்டுக்களைப் பெற்றது.

அந்தவகையில் இப்போது 48 கிலோ மீட்டர் நீளத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், மழைநீர் வடிகால்வாய்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்பணிகளில் ஒன்றான சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சிட்டி லிங்க் சாலையில், 3047 மீட்டர் நீளத்திற்கான, கிட்டதட்ட 3 கிலோ மீட்டருக்கும் மேலான அந்த நீளத்திற்கான மழைநீர் வடிகால்வாய்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கனவே நேரடியாக வருகை தந்து ஆய்வு செய்தார்கள்.

அந்த வகையில் 2 கிலோ மீட்டர் நீளத்திற்கு பணிகள் முடிவுற்று சைதாப்பேட்டை குறிப்பாக மடுவின்கரை, மசூதி காலனி, பிள்ளையார் கோவில் தெரு, வண்டிக்காரன் தெரு போன்ற பல்வேறு பகுதிகள்

மழை வெள்ள பாதிப்புகளிலிருந்து மீண்டது. மேலும், மீதமிருக்கிற ஒரு கிலோமீட்டர் நீளத்திற்கான பணிகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை நேரடியாக வந்து ஆய்வு செய்தார்கள்.

அதோடு, வடகிழக்கு பருவமழையை தொடர்ந்து, சென்னை மாநகரில் பெருநகர சென்னை மாநகராட்சியால் சாலைகள் சீரமைக்கும் பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ச்சியாக கண்காணித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒப்பந்தங்கள் எப்போது விடப்பட்டது, எப்போது அந்த பணிகள் தொடங்கப்படவிருக்கிறது என்பதை பெருநகர மாநகராட்சி நிர்வாகத்தோடு தொடர்ந்து ஆலோசித்து, ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அந்த வகையில் இன்றைக்கு 157ஆவது வட்டம் ஆற்காடு சாலையில், ரூபாய் 27.5 இலட்சம் மதிப்பிலான 475 மீட்டர் நீளத்திற்கான சாலை அமைக்கும் பணி, அதாவத ஏழு மீட்டர் அகலத்திற்கும், 475 மீட்டர் நீளத்திற்குமான சாலை அமைக்கும் பணியினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து ஆய்வு செய்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் வணக்கத்துக்குரிய மேயர் மற்றும் ஆணையர் அவர்களிடத்தில் மீதமிருக்கிற சாலைப் பணிகளையும் விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை கலந்து ஆலோசனை செய்தார்கள்.

இதோடு மட்டுமல்லாது, இன்னொரு கூடுதலான சிறப்பு, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பிலும், அரசு மற்றும் பல்வேறு துறைகளின் சார்பிலும் சென்னை மாநகரம் மழை வெள்ள பாதிப்புகள் இல்லாத அளவுக்கான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. நீர்வள ஆதாரத் துறை, பொதுப்பணித் துறை நெடுஞ்சாலைத் துறை, பெருநகர சென்னை மாநகராட்சி என்று பல துறைகள் ஒருங்கிணைந்து, சென்னை மாநகரில் வெள்ள பாதிப்புகளை முழுமையாக போக்கியது.

அந்த வகையில், கடுமையாக உழைத்த பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களை பாராட்டுகிற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வருகிற 31ஆம் தேதி சென்னை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் ஒரு பாராட்டு விழாவை நடத்தி அலுவலர்களை சிறப்பிக்க இருக்கிறார்கள். இதன் வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்களை வெள்ள பாதிப்புகளிலிருந்து சென்னை மீள்வதற்கு அரசுக்கு உறுதுணையாக இருந்த அனைத்து அலுவலர்களையும் பாராட்டுகிற, கௌரவிக்கற, சிறப்பிக்கிற அந்த நிகழ்ச்சியில் முதல் முறையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

**கேள்வி:** மழைநீர் வடிகால்வாய்கள் பணிகள், சென்னையில் மேற்கு மாம்பலம், பாரிமுனை, மைலாப்பூர் பகுதிகளில் சாலைகள் சீரமைக்கும் பணிகள் குறித்து...

**மாண்புமிகு அமைச்சர் பதில்:** சாலையை சீரமைக்கும் பணிகள் இன்றைக்கு தொடங்கி இருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகவே வந்து பார்த்திருக்கிறார்கள். மீதமுள்ள சாலை சீரமைக்கும் பணிகள் இன்னும் நான்கு மாத காலத்திற்குள் முடிவடையும். சாலையை அமைப்பது என்பது முதலில் தோண்டி எடுக்க வேண்டும். தோண்டி எடுத்துவிட்டு அதற்கு பிறகு, அதன் திட்ட மதிப்பீடுகள் தயாரித்து, அந்த வேலைகள் எல்லாம் முடித்துவிட்டார்கள். முறையாக சாலை அமைக்கும் பணிகள் நான்கு மாத காலத்திற்குள் முடிவடைந்துவிடும்.

**கேள்வி:** கிங் மருத்துவமனை வளாகம் செப்டம்பர் மாதத்தில் திறக்கப்படும் என்று ஏற்கனவே அறிவித்திருந்தீர்கள் அது பற்றி....

**மாண்புமிகு அமைச்சர் பதில்:** செப்டம்பர் வரை பணிக்காலம், ஒப்பந்த காலம் என்பது செப்டம்பர் வரை. ஆனால் அதற்கு முன்னாலேயே ஜூன் மாதத்திற்குள்ளாகவே, பணிகள் முடிவடைகிற வகையில், பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி வேகமாக நடைபெற்று வருகிற பணிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள், ஏற்கனவே ஒரு முறை ஆய்வு செய்தார்கள், இன்று மீண்டும் ஆய்வு செய்திருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து கள ஆய்வுகளை செய்து கொண்டிருக்கின்ற காரணத்தினால், மிக விரைவில் திட்டமிட்ட காலத்திற்கு முன்பாகவே பணிகள் முடிவடையவிருக்கிறது.

**கேள்வி:** நீட் தேர்வு சம்பந்தமாக தலைமைச் செயலகத்தில் சிறிது நாட்களுக்கு முன்பு ஆலோசனை கூட்டம் நடந்தது. தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது பற்றி...

**மாண்புமிகு அமைச்சர் பதில்:** ஏற்கனவே அது சம்பந்தமாக சொல்லியிருக்கிறோம். ஆயூஷ் அமைச்சகத்திலிருந்து ஒரு சில clarification கேட்டு கடிதம் வந்திருக்கிறது. அந்த கடிதத்திற்கான பதில் அனுப்புகின்ற முயற்சியினை சட்டத் துறை செய்து கொண்டிருக்கிறது. சட்ட வல்லுநர்களுடன் கலந்து பேசி இன்னும் ஓரிரு வார காலத்திற்குள் ஆயூஷ் அமைச்சத்திற்கு அந்த பதில் அனுப்பப்படவிருக்கிறது.

**கேள்வி** : ஏதாவது டெங்கு பாதிப்பு இருக்கிறதா?

**மாண்புமிகு அமைச்சர் பதில்:** இல்லை பாதிப்பே இல்லை. நீங்கள் சொன்னால் தான் பாதிப்பு.

**கேள்வி:** முதலமைச்சர் ஆய்விற்கு சென்றிருந்தபோது, நாய்கள் தொல்லை அதிகமாக இருக்கிறது. கழிவுநீர் கலந்து வருகிறது என்று சொல்லி இருக்கிறார்கள். இது பற்றி....

**மாண்புமிகு அமைச்சர் பதில்:** அதாவது, வேளச்சேரி தொகுதிக்குட்பட்ட ஒரு வார்டில் கழிவுநீர் கலந்து வருவதாக சொன்னார்கள். உடனடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரிய அதிகாரிகளை உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லி

உத்திரவிட்டிருக்கிறார்கள். இப்போது தெரு நாய்களை கொல்வதற்கு அரசு அனுமதிப்பது இல்லை. அந்த வகையில் Birth Control மட்டும் செய்து அந்த நாய்களை கொண்டு போய் விட்டுவிடுவார்கள். அதை மட்டும் தான் செய்ய முடியும். அந்த வகையில் ஏற்கனவே இருக்கின்ற Red Cross Society போன்ற பல்வேறு அமைப்புகள் மூலம் அந்த உயிரினங்களை பாதுகாக்கின்ற பணியிலும் அரசு ஈடுபட்டிருப்பதால், தெரு நாய்களின் பெருக்கத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க முடியுமே தவிர, அவைகளை அழிப்பதற்கான நடவடிக்கைகளை மாநகராட்சி நிர்வாகம் செய்ய முடியாது.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in